Pandian Journal Of Women's Studies
We are New Women

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*



பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்

**Volume 1, Issue 2, May 2022** **E-ISSN – XXXX-XXXX**

# The Feminist Thoughts of Mahatma Gandhi

**Dr V. Singaraja,** Assistant Professor of Tamil, Annai Fathima College of Arts and Sciences, Thirumangalam, Tamil Nadu, india.
**ORCiD**: **https://orcid.org/0000-0001-7535-2025**
**DOI: 10.5281/zenodo.6801450**

## Abstract

*Feminism is essential in the growing contemporary Indian literary context surpassing the regional barriers. The place of women in society has been criticized from time to time. To this end, feminist writings are proliferating in the literary context of Tamil society. All these writings play a major role in the advancement of women in society. Various thinkers have pointed out to the community the plight and misery of women. In that sense, the article takes a look at the feminist ideas of Mahatma Gandhi. The structure of this article is to examine in detail the place of women in society, the status of women, divorces due to dowry and remarriages, mixed marriages, etc.*

**Keywords:** Feminist Thoughts, Mahatma Gandhi.

## References

[1] Vinodkumar. *Van Man Pen*. Hindu Tamil Direction Publishing House, Chennai - 11.
[2] Ambai. *Udalenum Veli*. Kizhagu Pathipagam, Chennai - 14.
[3] Prema. *Penniam*. Tamil Puthagalayam, Chennai - 17.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Pandian Journal Of Women's Studies
We are New Women

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*



*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

**Volume 1, Issue 2, May 2022** **E-ISSN – XXXX-XXXX**

# மகாத்மா காந்தியின் பெண்ணியச் சிந்தனைகள்

**முனைவர் வெ.சிங்கராஜா**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அன்னை பாத்திமா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருமங்கலம், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0001-7535-2025**
**DOI: 10.5281/zenodo.6801450**

**ஆய்வுச் சுருக்கம்**

*வளர்ந்து வரும் தற்கால இலக்கியச் சூழலில் பெண்ணியம் இன்றியமையாதவனவாக உள்ளன. சமுதாயத்தில் பெண்களுக்கான இடம் காலந்தோறும் விமர்சனத்திற்கு உட்பட்டுக் கொண்டே வருகின்றது. இதன் பொருட்டே தமிழ்ச் சமுதாய இலக்கியச் சூழலில் பெண்ணியம் சார்ந்த எழுத்துக்கள் பெருகிக்கொண்டே இருக்கின்றது. இவ்வெழுத்துக்கள் அனைத்தும் சமுதாயத்தில் பெண்களின் முன்னேற்றத்திற்கு பெரும்பங்கு வகிக்கின்றது. பெண்களுக்கு நேர்கின்ற இன்னல்களையும் அவலங்களையும் பல்வேறு சிந்தனையாளர்கள் இச்சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டியுள்ளனார். அந்த வகையில் மாகாத்மா காந்தியடிகளின் பெண்ணியச் சிந்தனைகளைப் பற்றிக் காணும் வகையில் இக்கட்டுhயனது அமைகின்றது. இவற்றில் சமூகத்தில் பெண்களுக்கான இடம், பெண்களின் பணிநிலை, வரதட்சணையின் காரணமாக நிகழ்கின்ற விவாகரத்துக்கள் மற்றும் மறுமணம், கலப்புத் திருமணங்கள் முதலான அவலங்கள் அனைத்தையும் விரிவாக ஆராயும் வகையில் இக்கட்டுரையின் கட்டமைப்பு அமைகின்றது.*

**கருச் சொற்கள்:** மகாத்மா காந்தி, பெண்ணியச் சிந்தனைகள், திருமணங்கள், அவலங்கள்.

**முன்னுரை**

பெண்ணியம் என்பது உலகளாவியது. உலகிலுள்ள அனைத்து மனிதகுலத்துள்ளும், ஒவ்வொறு காலக்கட்டத்திலும் பெண்ணகளின் முன்னேற்றத்தை விமர்ச்சிக்க ஏற்பட்டது. குறிப்பாக, பெண்களின் சமத்துவத்தையும்,முன்னேற்றத்தையும் வழியுறுத்துவதாகும். பெண்களின் உரிமைகளைப் பேசுவதற்காக எடுத்தாளப்பட்டது. பெண்ணியம் பற்றி ஆராயும்போது சொல்லிக்கொண்டே செல்லலாம். இங்கு மகாத்மா காந்தியடிகளின் பெண்ணியச் சிந்தனைகள் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**சமூகத்தில் பெண்கள்**

ஆடவனும் பெண்ணும் அடிப்படையில் ஒன்றாயிருப்பதால் அவர்கள் பிரச்சனையும் முக்கியமான அம்சங்களில் ஒன்றேயென்பது என் அபிப்பிராயம் இருவருக்கும் ஆன்மா ஒன்றே இருவரும் ஒரே வகையில் வாழ்கிறார்கள். இருவர் உணர்ச்சிகளும் ஒன்றாகவே உள்ளன. ஒருவர் மற்றவர் குறையைப் பூர்த்தி செய்பவர், ஒருவரது உருவான உதவியின்றி மற்றவரால்

**Volume 1, Issue 2, May 2022** **E-ISSN – XXXX-XXXX**

வாழ முடியாது. ஆனால் ஆடவன் பெண் மீது யுக யுகாந்தரமாக ஆதிக்கம் செலுத்தி வந்திருப்பதால் பெண் தான் ஆணுக்குக் குறைந்தவளென்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறாள். தன் நலன் கருதி அவன் "நீ எனக்குக் குறைந்தவளே" என்று சொன்னதை அப்படியே ஏற்று வந்திருக்கிறாள். ஆனால் ஆடவரிடையே தோன்றிய மகான்கள் பெண்ணை ஆணுக்குச் சமமென்றே மதித்திருக்கிறார்கள். இருவரிடையிலும் ஓரளவுக்குமேல் வேற்றுமை இருப்பது உண்மை. அடிப்படையில் இருவரும் ஒன்று போன்றவர். ஆயினும் உருவத்தில் இருவருக்கும் முக்கிய வேறுபாடு உள்ளது. இதனால் இருவருக்கும் வேலைகள் வெவ்வேறாய் அமைந்துள்ளன.

பெண்டிருள் பெரும்பாலோர் எப்பொழுதுமே ஏற்கவிருக்கும் தாய்மைக் கடைமையை நிறைவேற்ற அவர்களுக்கு ஆடவனுக்குத் தேவையில்லாத சிறப்பியல்புகள் தேவையாகின்றன. அவள் தயங்கும் சுபாவமுள்ளவளாகயிருக்க, அவனோ எதற்கும் முன்வரும் இயல்பினன். அவள் வீட்டின் அதிபதி ராணி. அவன் உணவு தேடுபவனாயிருக்க, அதைச் சேமித்து வைத்து விநியோகிப்பவள் அவள். வீட்டிலுள்ளோர் அனைவரின் பராமரிப்புப் பொறுப்பு அவளுடையது. முனித இனத்தின் இளம் பயிரைப் போஷித்து வளாக்கும் தனி உரிமையும் பெருமையும் அவளைச் சார்ந்தது. அவளது கவனமில்லையேல் மனிதஇனமே வாடி வதங்கி மடிய வேண்டியதுதான். பெண்ணை, வீட்டைத் துறந்து வெளியேறி பாதுகாப்பிறகாகத் துப்பாக்கி தாங்குமாறு செய்ய நேர்ந்திருத்தல், அவளுக்கும் அவ்வாறு செய்த ஆடவனுக்கும் அவமானம் அளிப்பதென்பது என் அபிப்பிராயம். இது நாம் ஆதிகால அநாகரிக நிலைக்குத் திரும்புவதையும், நம் அழிவின் தொடக்கத்தையும் குறிக்கிறது. ஆடவன் ஏறிச் சவாரி செய்த குதிரை மீது பெண் சவாரி செய்யத் தொடங்குவதனால் அவள் தன்னையும் அவனையும் வீழ்த்தவே செய்வாள். தன் கூட்டாளியை அவளுக்கே உரிய வேலையை விடுமாறு தூண்டவோ வற்புறுத்தவோ செய்த ஆடவனையே இந்தப் பாபம்சாரும். வேளித்தாக்குதல்களிலிருந்து வீட்டைப் பாதுகாப்பதில் உள்ள வீர தீரம் ஒழுங்காகக் குடும்பத்தை நடத்துவதிலும் உள்ளது.

**பெண் அபலையல்ல**

ஆடவன் இழைத்துள்ள தீங்குகளுக்குள் மனித இனத்தின் சீரிய பகுதியான பெண்ணினத்தை இழிவுபடுத்திக் கொடுமைக்குள்ளாக்கியதைப் போல் இழிந்ததும், அருவருக்கத்தக்க மிருகத்தன்மை வாய்ந்ததும் வேறில்லை. நான் பெண்ணியத்தை பலவீனமானதென்றல்ல, ஆணை விட உயர்ந்தது, சீரியது என்றே கருதுகின்றேன். ஏனெனில் இன்றும் பெண்ணினமே தியாகத்திற்கும், வாய் திறவாது கஷ்டங்களைச் சகிப்பதற்கும், பணிவுக்கும், பக்திக்கும், ஞானத்திற்கும் உறைவிடமாயிருந்து வருகிறது (யங் இந்தியா 15-9-1921). பெண்களை இழிவுபடுத்தியதன் விளைவான கடுந்தண்டiனையை ஆடவன் அனுபவத்தேயாக வேண்டும். பெண், ஆடவன் வலைக்குத் தப்பி, தன் தகுதியையும்

**Volume 1, Issue 2, May 2022** **E-ISSN – XXXX-XXXX**

பெருமையையும் உணர்ந்து, அவன் இயற்றியுள்ள சட்டங்கள், செய்துள்ள ஏற்பாடுகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றை மீறிக் கிளம்பும் பொழுது அது அகிம்சை முறையிலேயே கிளம்புவதாயிருக்குமாகையால், தக்க பயன் அளிக்கத் தவறாது (யங் இந்தியா 16-4-1925). நான் பெண்ணாய்ப் பிறந்திருந்தால் பெண்களெல்லாம் தம் கைப்பாவைகள் என்று ஆண்களிடையே நிலவும் கட்டுக் கதையை எதிர்த்துப் புரட்சி செய்வேன் (யங் இந்தியா 8-12-1927). பெண்ணை அபலை எனல் அவதூறாகும். இது ஆடவன் பெண்ணுக்குப் புரியும் அநிதீ. மிருக பலமே பலமெனப்படுமானால் பெண்ணின் மிருகத்தனம் ஆணைன விடக்குறைந்ததே. அது நீதி பலமானால் பெண் ஆடவனை விட எவ்வளவோ உயர்ந்தவள் அவளுக்கு பகுத்தறிவும், அடக்கத்தின் உணர்வும், தியாக சக்தியும், சகிப்புத் தன்மையும், நெஞ்சுரமும் அதிகமல்லவா? அவள் இல்லையேல் ஆடவனில்லை நம் வாழ்க்கையின் நியதியே அகிம்சையானால் உலகின் உய்வு பெண்களைத்தான் பொறுத்திருக்கிறது. உள்ளத்தை ஆட்கொள்ள பெண்ணைப்போல ஆடவனால் முடியுமா? (யங் இந்தியா 15-9-1921)

**பெண்ணின் பணிப்புலம்**

சாதாரணமாக மனைவி தன் கணவன் தொழிலல்லாத வேறு தொழிலொன்றைச் செய்யலாமென்று நான் எண்ணவில்லை. குழந்தைகளின் பராமரிப்பைச் செய்து குடும்பக் காரியங்களையும் கவனித்தால் அவளுக்கு வேறு எதற்கும் பொழுதோ, திராணியோ இராது. முறையாக நடக்கும் குடும்ப நிர்வாகத்திற்கு வேண்டியதைச் செய்ய பெண் குடும்பக் காரியங்களைக் கவனித்து நடத்தி வருவாள். இவ்வாறு இருவரும் ஒருவருக்கொருவர் உதவியும், ஒருவர் குறையை மற்றவர் நிரப்பியும் வருவர் (ஹரிஜன் 12-10-1934). பெண்ணின் அதிகப் பொழுது அத்தியாவசிய குடும்பக் காரியங்களில் அல்ல, கணவனின் தற்பெருனமையைத் திருப்தி செய்வதிலும், தன்னை ஆடை அணிகளால் அலங்கரித்துக் கொள்வதிலுமே கழிகிறது. வீட்டிலேயே பெண் இவ்வாறு அடிமையாய் வாழ்தலை நான் நம் அநாகரிகத்தின் சின்னமென்று கருதுகிறேன். நம் பெண்ணியத்தை இந்தக் கொடுமையிலிருந்;பதில் நாம் இன்னும் காலந்தாழ்த்துதல் கூடாது. அவர்களுக்கு வீட்டு வேலைக்கே பொழுது போதாதிருக்கும் நிலை போக வேண்டும். (ஆங்கி பக் 25, பதிப்பு 1958)

**விவாக லட்சியம்**

மணமென்பது ஒரு புனிதமான காரியம். அது அவ்வாறேதான் இருக்க வேண்டும். அது புதுவாழ்வில் புகுவதைக் குறிப்பது. மணமாகவிருற்க்கும் பெண்கள் நல்ல வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தம் வாழ்வின் கூட்டாளியைத் தேர்ந்தெடுப்பதில் அவர்களும் கலந்து கொள்ளவும், தாம் தொடங்கப் போகும் வாழ்க்கையின் விளைவுகளை அறிந்திருக்கவும் வேண்டும். (யங் இந்தியா 19-8-1926) பங்காளர் இருவரையும் கட்டு திட்டங்களுக்குட்படுத்தும் மதச்சடங்கென மணம் கருதப்படவேண்டும். அது அவர்கள் இருவரிடையில் மட்டும் கலவியை

Volume 1, Issue 2, May 2022 E-ISSN – XXXX-XXXX

அனுமதிப்பதாய் இருக்க வேண்டும். அக்கலவியும் இருவரும் பிள்ளையை விரும்பி அதற்குத் தகுதி பெற்றிருக்கையில் தான் திகழ வேண்டும். (யங் இந்தியா16-9-1926)

**விவாகரத்தும் மறுமணமும்**

தன் உரிமையை வற்புறுத்த முடியாமலும். சில சமயங்களில் அதற்கு விருப்பமில்லாமலும் உள்ள அடங்கிய மனைவிக்கு விவாகரத்து வசதிகளினால் முரட்டுத் தனமுள்ள கணவன் கொடுமைகளிலிருந்து பாதுகாப்பெதுவும் ஏற்படுவதில்லை. இந்த பண்பாடு மனைவியை கணவனுக்கு அளவுக்கதிகமாக அடங்கவும். கணவன்தான் எல்லாம், தனக்கென்று தனிவாழ்வு இல்லையென்று எண்ணவும் செய்து பிழை செய்திருக்கிறது. இது கணவனை சில சமயங்களில் ஒரு மிருகத்தின் தரத்திற்கு இழிந்து அட்டகாசம் செய்யச் செய்வதில் முடிந்திருக்கிறது. கணவர்மார் ஆண்களுக்கழகில்லாத முறையில் நடந்து கொள்வதை பொதுஜன அபிப்பிராயம் டிக்குமாறு செய்வதுமேயாகும். எனவே சட்டரீதியாயுள்ள உறவை முறிக்காமலே மனைவி கணவன் வீட்டை விட்டு வெளியேறி மணமே ஆகாதது போல் தனியே வாழ்ந்து வரலாம் விவாகரத்துக்கு இடமில்லாத இந்து மனைவிக்கும் சட்டம் அனுமதிக்கும் இரண்டு வழிகள் உள்ளன. இந்தப் பரிகாரம் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சிறிதும் பயன்படுவதில்லையென்பது என் அனுபவம். ஏனெனில் இது யோக்கியமான பெண்ணுக்குச் சிறிதும் பயன்படுவதில்லையென்பது என் அனுபவும். ஏனெனில் இது யோக்கியமான பெண்ணுக்குச் சிறிதும் சமாதானம் அளியாததோடு கணவனை திருத்துவதே ஒவ்வொரு மனைவியும் சமூகம் விரும்புவதாகையால் அது இதனால் அசாத்தியமாகாவிடினும் அதிக சிரமமாகி விடுகிறது. (யங் இந்தியா 3-10-1929)

**கைம்பெண் மறுமணம்**

கணவன் அன்பை அனுபவித்த பிறகு அவள் இறக்க தானாக ஏற்றுக் கொண்ட கைம்மை வாழ்க்கைக்கு ஒரு பெருமையை அளித்து வீட்டைப் புனிதமாக்குவதோடு ப மதத்தையே மேன்மைப் படுத்துகிறது. மதமோ வழக்கமோ விதிக்கும் கைம்மை சுமக்க முடியாத சுமையாக மறைவில் நடக்கும் துர்ச் செயல்களினால் வீட்டைச் கெடுத்து மதத்தை இழிவுபடுத்துகிறது.

**கலப்பு மணங்கள்**

இந்தியா பிளவுபடுத்த முடியாத ஒரே நாடென்றால் தமக்குள் மணம் செய்து கொள்ளாமலும் சேர்ந்துறமர்ந்து உணவு கொள்ளாமலும் உள்ள எண்ணற்ற சிறிதும் பெரிதுமான நாமாக சிருஷ்டித்துக் கொண்ட சாதிகளும் பிரிவுகளும் இங்கே இருத்தல் கூடாது. இந்தக் கொடிய வழக்கத்திற்கும் மதத்திற்கும் சம்பந்தமே இல்லை. தனி மனிதர்கள் இதை மாற்ற முயன்று பயனில்லை. சமூகம் முழுவம் இதற்குப் பக்குவமாகும் வரை காத்திருக்க வேண்டியதே என்று சொல்வதற்கு அர்த்தமில்லை. சீர்திருத்தமும் மிருகத்தனமான பழக்க வழக்கங்களை எதிர்க்கத் துணிந்த தீரர்களால் அன்றி நடந்ததே இல்லை. (ஹரிஜன் 25-7-1936)

Volume 1, Issue 2, May 2022 E-ISSN – XXXX-XXXX

**வியபிசாரம்**

காமருபித்திற்குப் பெண்களை இரையாக்குதல் சரியல்ல. எளியோருக்கு உதவுதல் என்ற நியாயம் இங்கே மிகவும் சிறப்பாகப் பொருந்துவது. நூன் பசுப்பாதுகாப்பு என்னும் பொழுது அதனுள் பெண்ணினது கற்பின் பாதுகாப்பும் அடங்கிருப்பதாகவே கொள்கிறேன். நாம் நம் பெண்டிரை தாய்மாரையும் சகோதரிகளாக கருதக் கற்காதவரை இநதியா உய்வதற்கே இடமில்லை. நாம் மனிதத் தம்மையைக் கொன்று நம்மை வெறும் மிருகங்களாக்கும் பாபங்களைக் களைத்து தூய்மையுறுவோமாக.

**தற்காலப் பெண்**

பெண் தனக்கே தெரியாது பல வழிகளில் ஆடவனை மீறியிருப்பதைப் போல, ஆடவனும் உணராமலே தன் மீது அவள் ஆதிக்கம் பெறுவீதைத் தடுக்க வீணில் பாடுபட்டிருக்கிறான். இதன் விளைவு தேக்கநிலை தான். இவ்வாறு நோக்குகையில் இது பாரத மாதாவின் அறிவு படைத்த பெண்கள் தீர்க்க வேண்டிய முக்கியமான பிரச்சனையாக உள்ளது. ஆவர்கள் மேனாட்டாருக்கே பொருத்தமான பழக்க வழக்கங்களைப் பின்பற்றிப் பயனில்லை. இந்தியச் சூழ்நிலைக்கும் இந்தியாவின் இயல்புக்கும் பொருத்தமான முறைகளைக் கையாள வேண்டும். அவர்கள் நம் பண்பாட்டின் சிறந்த அம்சங்களை விடாது பற்றிப் பாதுகாப்பதில் கலங்காத உறுதியும், அதன் தீய அம்சங்களைத் தயங்காது விலக்குவதில் திடமும் பெற்றிருக்க வேண்டும். இது சீதை, திரௌபதி, சாவித்திரி போன்றவர்கள் செய்;ய வேண்டிய பணி தனக்கு யாரும் நிகரில்லையென்பவராலோ, பணிந்தவர் போல் வேஷம் போடுபவராலோ இது ஆகாது. (யங் இந்தியா 17-10-1929)

**முடிவுரை**

தொடக்கக் காலத்தில் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்கி;ன்ற காலம்மாரி விஞ்ஞாணம் வளர்ச்சியில் ஆண்களுக்கு இனமான பெண்கள் என்ற நிலையில் முன்னேற்றம் அடைந்து வருவதை நாம் தினந்தோரும் அறிகின்றோம். ஆனால் மகாத்மா காந்தியடிகளின் பார்வையில் சமூகத்தில் பெண்களின் நிலைப்பாடுகள் ஆணும் பெண்ணும் சமநிலைப்போக்கு, பெண் அபலையல்ல என்ற விவாதமும், விவாக லட்சிய போக்கும், விவாகரத்தும், மறுமண எண்ணங்களும் வியபிசாரம் பற்றி அவரது கருத்;துக்களும், பெண்ணின் கீழ்நிலையைத் தள்ளும் வரதச்சினைக் கொடுமைகளும், நகைத்திட்டங்களும், தற்காலப் பெண்களின் நிலைகளையும் காந்தியடிகளின் கூற்றுக்களின் வழியாக நன்கு ஆராயப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1] வினோத்குமார். *வான் மண் பெண்.* இந்து தமிழ் திசைப் பதிப்பகம், சென்னை - 11.

[2] அம்பை. *உடலெனும் வெளி.* கிழக்குப் பதிப்பகம், சென்னை – 14.

Volume 1, Issue 2, May 2022 E-ISSN – XXXX-XXXX

[3] பிரேமா. *பெண்ணியம்.* தமிழ்ப் புத்தகாலயம், சென்னை – 17.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.